1971 டிசம்பர் 18]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது செலவைப் பொறுத்த கேள்வி அல்ல. எனினும் பொதுவாக பேருந்துகள் நின்று சென்றால் பயணிகள் ஒழுங்காக கியூ வரிசையில் நின்று செல்வதற்கு, கூடுமான வரையில் நெரிசல் நேரங்களில், பயன் உள்ளதாக இருக்கும் என்று அரசு கருதிய காரணத்தால், 50 இடங்களில் பரீட்சார்த்தமாக இந்த முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஒரு மாதத்திற்கு அமலில் இருக்கும். அதற்குப் பிறகு இதை மேலும் விஸ்தரிப்பது பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

அரசுப் பாடப்புத்தகங்கள் விற்பனை உரிமை

*** 550 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசாங்கச் சார்பில் வெளியாகும் பாடப்புத்தகங்களின் விற்பனை உரிமை எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1970-71-ஆம் ஆண்டில் ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திற்கும், அரசுப் பாடப்புத்தகங்களை விற்பனை செய்யும் உரிமையை வழங்க, பதிவு செய்யப்பட்ட புத்தகப் பதிப்பாளர்களிடமிருந்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் குத்தகை விவரம் கோரிப் பின் ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் ஒருவர் வீதம் விற்பனையாளரை நியமித்தது.

1971-72 கல்வியாண்டில் சென்னை மாநகரில் அரசுப் பாடப் புத்தகங்களின் விற்பனையைப் பாடநூல் நிறுவனமே நேரடியாக மேற்கொண்டது. இம்முறைப்படி சில்லரை விற்பனையாளர்கள் மூலமாகவும் உயர்நிலைப்பள்ளிகளுக்குத் தேவைக்கேற்பவும் புத்தகங்கள் விற்கப்பட்டன. சென்னை மாநகரத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் சென்ற ஆண்டு மேற்கொண்ட முறைப்படி மொத்த விற்பனையாளர்கள் மூலமாகவே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்படும் அரசுப் பாடப் புத்தகங்கள் விற்கப்படுகின்றன.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சில சமயங்களில் அரசு புத்தகங்கள் விற்பனைக்கு வருவதற்கு மிகக் காலதாமதம் ஆகி, காலாண்டுத் தேர்வு நடைபெறுகிறபோது கூட அரசு புத்தகங்கள் வருகின்றன என்று புகார் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1970-71-ம் ஆண்டில் காலத்தாழ்வு ஏற்பட்டது. ஆனால் 1971-72-ல் காலத்தாழ்வு ஏற்படாத வகையில், முன்கூட்டியே குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, ஒப்பந்தக் காரர்கள் மூலம் விற்பனைப் பணம் எவ்வளவு வரவேண்டியிருக்கிறது. அதை வசூலிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய முழு விவரம் இல்லை. சில விற்பனையாளர்கள் சரியாகப் பணம் திரட்டி, செலுத்தாவிட்டால் அவர்களுக்கு மறுபடியும் கொடுக்காமல், அவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவற்றை எடுத்திருக்கிறது. டலரிடத்திலிருந்து முன்கூட்டியே டிபாசிட் வாங்கியிருக்கிறோம். டிபாசிட் தொகையை எடுத்துக்கொண்டு, அதற்கு மேலே பணம் வரவேண்டியிருந்தால், அதை வசூலிக்க வழக்குத் தொடருதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பெரும்பாலும் ஒப்பந்தக்காரர்கள் பணம் செலுத்திவிட்டார்கள். ஒரு சிலர்தான் உரிய காலத்தில் பணம் கட்டவில்லை. அவர்களுக்கு மேற்கொண்டு அந்த உரிமை வழங்கப் படவில்லை.

மேயர் தேர்வு

***551 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வகுப்புவாத பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் ஆண்டுக்கு ஒரு புதிய மேயரைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறைப் பழக்கம் மதுரை மாநகராட்சியிலும் அனுசரிக்கும் உத்தேசம் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எல்லா நகராட்சிகளிலும் இம்மாதிரி ஆண்டுக்கு ஒரு முறை நகராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்க வகை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் கூட மேயர் தேர்தலில் வகுப்புவாரி அடிப்படையில் ஆண்டுக்கு ஒரு மேயர் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது சட்டதிட்டத்தில் ஏற்படுத்தப்படவில்லை. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டத்தில் கூட அப்படிப்பட்ட வகையில் சட்டம் ஒன்றும் இல்லை. அது ஒரு கன்வென்ஷன், மரபு என்ற முறையில்தான் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் இப்படிப்பட்ட முறை சிலபல நகராட்சி மன்றங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. திண்டுக்கல்லிலும், வாணியம்பாடியிலும் ஒரு தடவை ஹிந்து மதத்தைச் சார்ந்தவர் நகராட்சித் தலைவராக இருந்தால், அடுத்த தடவை முஸ்லீம் வகுப்பைச் சார்ந்தவர் தலைவராக வரவேண்டுமென்று மரபு இருக்கிறது. சட்டத் திட்டத்தை ஒட்டி அல்ல. மரபை ஒட்டித்தான் அப்படி நடக்கிறது.